ECSL

Ethics Excellence Education

# ஆண்டறிக்கை

## 2019

இலங்கைப் பொறியியற் பேரவை

# ஆண்டறிக்கை 2019

## இலங்கைப் பொறியியற் பேரவை

# பொருளடக்கம்

**வரலாறு**

**அறிமுகம்**

நிறுவனத் தகவல்கள்
2019 ஆம் ஆண்டில் இலங்கைப் பொறியியற் பேரவையை தாபித்தல்

**குறிப்பு**

இலங்கைப் பொறியியற் பேரவை மற்றும் தேசிய ரீதியான பொறுப்பு
இலங்கைப் பொறியியற் பேரவையின் செயற்பாடுகள்
பொறியியல் தொழில் முனைவர்கள் உரித்தான வகுதிகள் மற்றும் தகைமைகளை அடையாளம் காணுதல்

**தலைவரின் செய்தி**

**நிறுவனக் கட்டமைப்பு**

பேரவை
பணிக் குழு
பேரவையின் அங்கத்தவர்கள் தொடர்பான சிறு குறிப்பு

**புகைப்படங்கள்**

**நிர்வாகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய விசேட சந்தர்ப்பங்கள்**

இலங்கைப் பொறியியற் பேரவையை தாபித்தல்
இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அமைச்சின் பங்களிப்பு
பேரவையை நிலை நாட்டுவதுடன் தொடர்புடையதாக பொது மக்களை அறிவூட்டுதல்
திறப்பு விழா
இலங்கையில் "பொறியியலாளர்களினது தினம்" பிரகடனப்படுத்துதல்
இலங்கை பொறியியற் பேரவை தொடர்பில் இலட்சினையொன்றைத் தேர்ந்தெடுத்தல்
பேரவையின் கூட்டங்கள்
அலுவலகத்தை நிலை நாட்டுதல்
பணியாட்களின் எண்ணிக்கையை அனுமதிப்பதுடன் தொடர்புடைய ஒருங்கிணைப்பு செயற்பாடுகள்
உத்தியோகபூர்வ இணைய தளத்தை வெளியிடுதல்
பணிக் குழு
நிதி நிலைமைகள்

**பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் இன்றளவிலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள செயற்பாடுகள்**

பொறியியற் தொழில் முனைவர்களை பதிவு செய்தல்
பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்
இன்றளவிலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள பணிகள்

**பொறியியற் பேரவையின் எதிர்க்காலம்**

**நிதிக் கூற்றுக்கள்**

**கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வு அறிக்கை**

## வரலாறு

இலங்கையின் பல்வேறு இடங்களில் கிடைக்கப் பெறுகின்ற பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் பல நூற்றாண்டுகளாக, அதாவது பரம்பரை பரம்பரையாக மேற்குறித்த இலங்கை குடி மக்களினால் நிர்மாணிக்கப்பட்ட சிறப்பு மிக்க பண்புகளை தன்னகத்தே கொண்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் தொடர்பில் தெளிவான சாட்சிகளை வெளிக் காட்டுகின்றன. நவீன உலகில் தொழில்நுட்ப ரீதியாக முன்னணியிலுள்ள பல நாடுகள் காணப்பட்டாலும், இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் எமது நாடு அன்றிருந்த தொழில்நுட்பத்துக்கு மத்தியில் அதி கூடியளவில் விருத்தியடைந்து காணப்பட்டமைக்கு அக் கால கட்டத்தில் கட்டியெழுப்பப்பட்ட புராதன சமய வழிபாட்டு கட்டிடத் தொகுதிகளில் அமைந்துள்ள பாரிய நிர்மாணிப்புகளும், பாரியளவான நீர்ப்பாசன தொகுதிகளும் சான்று பகர்கின்றன.

பிரித்தானியரின் ஆட்சிக் கால கட்டத்தில் சரான நவீன பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி ஆரம்பிக்கப்பட்டதுடன், அது படிப்படியாக விருத்தியடைந்து இலங்கையின் பொறியியலாளர்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய வண்ணம் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கக் கூடிய பல கருத்திட்டங்களில் பங்கேற்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அரச அனுசரணை பெறப்படுகின்ற கண்காணிப்பு நிறுவனங்களின் வாயிலாக மேற்கத்தியமற்றும் உள் நாட்டு வைத்திய முறைகள் போன்ற அதற்குச் சமாந்தர நிலையிலான பல தொழிற் துறைகள் ஓரளவுக்கேனும் கண்காணிக்கப்பட்டாலும், பொறியியல் தொழில் முனைவர்கள் தொடர்பில் அத்தகைய கண்காணிப்பு செயன் முறைகளை அறிமுகப்படுத்துதல் தொடர்பில் தாமத நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலைக்கு மத்தியில் இலங்கைப் பொறியியற் பேரவை நிலை நாட்டப்பட்டதன் வாயிலாக, வரலாற்று சிறப்பு மிக்க காலப் பகுதியை சேர்ந்த பல நூற்றாண்டு காலப் பகுதி வரை பரம்பிய தெளிவுத் தன்மையுடன் கூடிய தாய் நாட்டில் நீண்ட காலமாக பெயர் பெற்ற பொறியியல் தொழில் முனைவின் விசேடமான ஒரு வெற்றியாகவும் இது அமையும்.

உலகின் ஏனைய தேசத்தவர்களினால் செயற்படுத்தப்பட்டுள்ள, ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய கண்காணிப்பு நிறுவனமொன்றை நிலை நாட்டும் தேவைப்பாடு தொடர்பில் நீண்ட காலமாக இலங்கையின் பொறியியல் தொழில் முனைவர்கள் கவனம் செலுத்தியிருந்தனர். இலங்கையின் பொறியியலுடன் தொடர்புடைய தொழிற் சார் நிறுவனங்களினால் பொருத்தமான கண்காணிப்பு நிறுவனமொன்றை நிலை நாட்ட வேண்டிய தேவை தொடர்பில் அரசுக்கு தெளிவுபடுத்துவதற்கு இற்றைக்கு 25 வருட காலப் பகுதிக்கு முன்பே நடவடிக்கை எடுக்கப்பட்டது. பங்குதாரிகளிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசுகளிலிருந்து கிடைத்த வசதிகள் மற்றும் தலைமைத்துவம் போன்ற அனைத்து விடயங்களும் ஒன்று சேர்ந்ததாக 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் தேவையான சட்ட ரீதியான அதிகாரம் இப் பேரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதல் பொறியியற் பேரவை நிலை நாட்டப்படுதல் மற்றும் 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி இலங்கை பொறியியற் பேரவையின் உத்தியோகபூர்வ ஆரம்ப திகதியாக பிரகடனப்படுத்தப்பட்ட வண்ணம் 2018 டிசம்பர் 16 மற்றும் 19 ஆகிய திகதிகளில் தேசிய பத்திரிகைகளில் இது தொடர்பில் பிரசுரிக்கப்பட்டது.

வரலாற்று சிறப்பு மிக்க பல விடயத் தொடர்களின் அதி கூடிய சந்தர்ப்பத்தை விளக்கிய வண்ணம் இலங்கைப் பொறியியற் பேரவையின் அலுவலகம் நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் மேல் மாடியில் நிலை நாட்டப்பட்டு, 2019 செப்டம்பர் 17 ஆம் திகதி அதி மேதகு சனாதிபதியவர்களினது தலைமையில் விழாக் கோலத்துடன் அவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

## அறிமுகம்

2017 மார்ச் 10 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் II ஆம் பிரிவிற்கான மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட 2017 இன் இலக்கம் 04 ஐ உடைய இலங்கைப் பொறியியற் பேரவை சட்டத்தின் கீழ் இலங்கைப் பொறியியற் பேரவை (ECSL) நிலை நாட்டப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் மூலம்,

- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழில் ரீதியான நிலைப்பாடுகள் மற்றும் நடத்தைகளை ஒழுங்கமைக்கும் மற்றும் முன்னெடுக்கும் பொறுப்பிற்கும்
- பொறியியல் தொழில் முனைவர்களைப் பதிவு செய்வதற்கும்
- அதனுடன் தொடர்புடைய விடயங்கள் அல்லது அதற்கு உரித்தான சமாந்தர தரப்பு விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கும்

இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## பொறியியல் தொழில் முனைவர்களைப் பதிவு செய்தல்

சட்டத்தின் பிரகாரம் அனைத்துப் பொறியியல் தொழில் முனைவர்களும் இலங்கைப் பொறியியற் பேரவையில் தம்மைப் பதிவு செய்ய வேண்டியுள்ளனர். சட்டத்தின் விளக்கக் குறிப்பின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளவாறு பொறியியல் தொழில் முனைவர்கள் உள்ளடங்கக் கூடிய வகுதிகள் ;

- பட்டயம் பெற்ற பொறியியலாளர்கள்
- இணைப் பொறியியலாளர்கள்
- சேர் நிலைப் பொறியியலாளர்கள்
- கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள்
- பொறியியல் தொழில்நுட்பவியலாளர்கள்

இலங்கையில் பணியாற்றக் கூடிய வெளி நாட்டு பொறியியல் தொழில் முனைவர்கள், நான்கு மாத காலப் பகுதிக்கு தற்காலிக அடிப்படையில் பதிவு செய்யும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இலங்கைப் பொறியியற் பேரவை கருதியிருப்பதுடன், அவரது/அவளது தொடர்புடைய தகைமைகள் தொடர்பில் இலங்கைப் பொறியியற் பேரவை திருப்தியடையுமாயின் பொறியியற் பேரவையின் விருப்பத்தின் பேரில் அப் பதிவை மேலும் நீடிக்கக் கூடியதாகவிருக்கும்.

## நிறுவனத்துடன் தொடர்புடைய தகவல்கள்,

**நிறுவனத்தின் பெயர்**
இலங்கைப் பொறியியற் பேரவை

**சட்ட ரீதியான தன்மை**
அரசுக்கு உரித்தான கண்காணிப்பு நிறுவனமாகக் காணப்படுதல்

**சமாந்தர நிலை அமைச்சு**
நீர்ப்பாசன அமைச்சு

**ஆரம்பிக்கப்பட்ட திகதி**
2018 ஆகஸ்ட் 24

**சட்ட ஆலோசனை**
திருமதி ருவனி ஹபுஆரச்சி

**தலைமை அலுவலகம்**
4 ஆவது மாடி, நீர்ப்பாசன திணைக்கள வலாகம்
230, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி இலக்கம் - 0112588811
மின்னஞ்சல் - registrar@ecsl.lk
இணைய தளம் - www.ecsl.lk

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி

**வரியை அடையாளம் காணக் கூடிய இலக்கம்**
10276922802192003

**சட்டத்தின் பிரகாரம் பங்குதாரிகள்**
இலங்கைப் பொறியியல் நிறுவனம்
இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம்
மூன்றாம் நிலை மற்றும் தொழிற் துறை கல்வி ஆணைக் குழு
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

# 2019 ஆம் ஆண்டில் இலங்கைப் பொறியியற் பேரவையின் ஆரம்பிப்பு




நீண்ட கால தேசிய தேவையாகக் காணப்பட்ட இலங்கைப் பொறியியற் பேரவை [ECSL] இறுதியாக 2019 செப்டம்பர் 17 ஆம் திகதி விழாக்கோலத்துடன் நிலை நாட்டப்பட்டது.

அது இலங்கை அரசின் நியாயப்படுத்துகையை எய்தும் செயற்பாட்டுடன் கூட்டிணைந்த பகுதியொன்றான இலங்கையின் பொறியியலாளர் தொழிற் துறையைச் சேர்ந்த அதியுயர்ந்த கண்காணிப்பு நிறுவனமாகக் காணப்படுகின்றது.

2017 இன் இலக்கம் 4 ஐ உடைய இலங்கைப் பொறியியற் பேரவை சட்டத்தின் கீழ் இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அதிகாரம் கிடைப்பதுடன், தொடர்புடைய உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத் தகைமைகளைத் தம்மகத்தே கொண்ட தொழிற் துறையாக பதிவு செய்யும் செயற்பாடுகளும், இலங்கையினுள் பொறியியல் தொழிற் துறையை கண்காணிக்கும் செயற்பாடுகள் மற்றும் பிரதி நிதித்துவப்படுத்தும் செயற்பாடுகள் இலங்கைப் பொறியியற் பேரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டறிக்கையின் ஊடாக பேரவையின் தன்னிச்சையான வரலாற்று சிறப்பு மிக்க ஆரம்ப கால கட்டத்தில் விருத்தியடைந்த செயற்பாடுகளும், பேரவையின் செயலாற்றுகை தொடர்பான ஏனைய முக்கியமான விபரங்களும் விரிவாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

## குறிப்பு
## இலங்கைப் பொறியியற் பேரவை மற்றும் அதன் பொறுப்பு

இலங்கைப் பொறியியற் பேரவை நிலை நாட்டப்பட்டதன் வாயிலாக தாய் நாட்டின் கௌரவ மிக்க பொறியியல் தொழிற் துறை தொடர்பில் முன்பை விட அதிகளவான பங்களிப்பை வழங்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல் விசேடமான திருப்பு முனையாகக் காணப்பட்டது. அது வரலாற்றுக்கு முந்திய காலப் பகுதியைச் சேர்ந்த பல நூற்றாண்டுகள் வரை பரந்துபட்ட தெளிவான நிதியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நீண்ட காலமாக உலகம் முழுதும் பொறியியல் தொழிற் துறையின் சம கால சமாந்தர நிலையிலான குறிக்கோள்களை ஏனைய தேசத்தவர்கள் செயற்படுத்தும் விதத்தில் கட்டமைக்கப்பட்டவாறு கண்காணிப்பு மற்றும் பிரதிநிதித்துவ தேசிய நிறுவனத்தை நிலை நாட்டும் தேசிய தேவை தொடர்பில் நினைவுபடுத்திய வண்ணம் இலங்கையைச் சேர்ந்த பொறியியல் தொழிற் துறை தொடர்பில் முழுக் கவனம் செலுத்தப்பட்ட வண்ணமுள்ளது.

பங்குதாரிகளிடையிலும், தேசிய தலைமைத்துவத்தின் கீழும் நீண்ட காலமாக பேச்சு வார்த்தைகளும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆட்சிக்கு வந்த அரசுகளிடமிருந்து கிடைத்த அனுசரணை போன்ற அனைத்து விடயங்களினதும் இறுதியில் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கைப் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் தேவையான சட்ட அதிகார வழங்குகை கையளிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய அடிப்படையில் நிலை நாட்டப்பட்ட இலங்கைப் பொறியியற் பேரவை பொறியியல் தொழிற் துறையைக் கண்காணிக்கும் பொருட்டு அதிகாரமுள்ள அதியுயர்ந்த நிறுவனமாக நியமிக்கப்பட்ட வண்ணம் தேசிய தலைமைத்துவத்தை வகிக்கக் கூடிய பொறுப்புள்ள பாரிய செயற்பாட்டை அன்றிருந்து கையேற்று செயற்பட்ட வண்ணமுள்ளது. குறிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தகைமை பெற்ற பொறியியல் தொழில் முனைவர்களைப் பதிவு செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்தல், அத் தொழில் முனைவர்களினது தகாத செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் மற்றும் இலங்கையில் பொறியியல் தொழிற் துறையில் ஈடுபடுவதுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் அரசு மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதித்துவத்தை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் சட்ட ரீதியாக அதிகாரம் வழங்கப்பட்ட நிறுவனமாக செயற்பட்ட வண்ணமுள்ளது.

## இலங்கைப் பொறியியற் பேரவையின் பணிகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை முன்னெடுக்கும் பொருட்டு இலங்கைப் பொறியியற் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழில் நிலைகளை பேணுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழில் நடத்தைகளை பேணுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களை 06 வகுதிகளின் கீழ் பதிவு செய்தல்
- இலங்கையில் பொறியியல் தொழிற் துறையில் ஈடுபடுவதுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் அரசு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநித்துவத்தை வெளிக் காட்டுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது பதிவு ஆவணங்களைப் பராமரித்தல்
- பதிவு செய்யப்பட்ட பொறியியல் தொழில் முனைவர்கள் தொடர்பான பட்டியலை இடைக்கிடையில் பிரசுரித்தல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது தொழிற் சார் முறைக்கேடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தல்
- பேரவையின் பணிக் குழுவுக்கு செலுத்த வேண்டிய சம்பளத்தை தீர்மானித்தல்
- பதிவு செய்தல் தொடர்பில் செலுத்த வேண்டிய கட்டணங்களை தீர்மானித்தல்
- பதிவு செய்கை சான்றிதழை வெளியிடுதல்
- பொறியியல் தொழில் முனைவர்களினது தர நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான பிற எக் காரணியாவது
- அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சமமான விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை வழங்குதல்

## சட்டத்தின் பிரகாரம் பொறியியல் தொழில் முனைவர்கள் உரித்தான வகுதிகள் மற்றும் தகைமைகள்

<u>பட்டயம் பெற்ற பொறியியலாளர்</u>
1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் பட்டயம் பெற்ற பொறியியலாளர்

<u>இணைப் பொறியியலாளர்</u>
1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பெறியியலில் நான்காண்டு முழு நேரப் பட்டம் அல்லது 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினது இணை உறுப்பினரொருவர்

<u>சேர் நிலைப் பொறியியலாளர்</u>
1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மூன்றாண்டு முழு நேரப் பட்டம்

<u>கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்</u>
1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவகத்தினதும் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள்

<u>பொறியியல் டிப்ளோமாதாரி</u>
1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை எந்திரவியல் டிப்ளோமாதாரிகள் நிறுவனத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்பவியல் நிறுவகத்திலிருந்து பெறப்பட்டதுமான பொறியியல் டிப்ளோமா

<u>பொறியியல் தொழில்நுட்பவியலாளர்</u>

(i) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதும், பொறியியல் தொழில் நுட்பவியலின் தேசிய தொழிற் சார் தகைமை மட்டம் IV (NVQ Level) அல்லது சமமான தகைமை.

(ii) பொறியியல் தொழில்நுட்பவியலில் ஓராண்டு முழு நேரக் கல்வி கற்கை நெறி மற்றும் இயைபான துறையில் ஓராண்டுக் கைத்தொழில் அனுபவத்தைப் பெற்றவர் அல்லது ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஒரு தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்டதுமான டிப்ளோமாவை அல்லது தொழில்நுட்பவியற் சான்றிதழை வைத்திருப்பவர்

## தலைவரின் செய்தி



இந் நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டின் முதுகெலும்பாக செயற்படக் கூடிய தொழில் முனைவர் குழுவொன்றின், 25 வருட கால நீண்ட கனவு மற்றும் ஆர்ப்பாட்டம், 2017 மார்ச் 10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் இலக்கம் 04 ஐ உடைய சட்டத்தை பிரசுரித்ததன் வாயிலாக பூர்த்தி செய்யக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. அச் சட்டம் இலங்கைப் பொறியியற் பேரவை சட்டம் என அறிமுகப்படுத்தப்பட்டதுடன், பொறியியல் தொழில் முனைவர்களின் நிலை மட்டங்கள் மற்றும் நடத்தைகளைப் பேணுதல், பொறியியல் தொழில் முனைவர்களின் பல்வேறு வகுதிகளைப் பதிவு செய்தல், மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சமாந்தர நிலையிலான விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை வழங்குதல் தொடர்பில் பொறுப்புள்ள இலங்கைப் பொறியியற் பேரவையை நிலை நாட்டும் பொருட்டு அச் சட்டத்தின் கீழ் இட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

1924 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலை நாட்டப்பட்ட வைத்திய சபை, இலங்கை சுகாதார பிரிவு தொடர்பில் பொறுப்பு மிக்க அமைச்சின் கீழ்ஆணைப்படுவதாக பொதுவே யாவரும் அறிந்துள்ளனர். மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்துடன் கூட்டிணைந்து பணியாற்றக் கூடிய ஒரு சில அமைச்சுக்கள் காணைப்படுகின்றன. இவற்றுள் பொறியியற் பேரவையை நிலை நாட்டப்பட்ட அமைச்சின் கீழான செயற்பாடுகள் வரவேற்கப்பட்டன.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் கைச்சாடிடப்பட்ட 2018 செப்டம்பர் 10 ஆம் திகதிய தன்னிச்சையான நியமனக் கடிதம் பொறியியற் பேரவையின் எதிர்க்கால அங்கத்தவர்களுக்கு கிடைத்த பிற்பாடு கருதுகோள்கள் நிறைவடைந்தன. 2018 ஏப்ரல் 01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பொறியியற் பேரவையின் தலைவர் நியமிக்கப்பட்டார்.

எந்தவொரு புதிய நிறுவனம் தொடர்பிலும் மற்றும் பூச்சிய கணக்கு மற்றும் இட வசதிகளற்ற தன்மை உள்ளடங்கிய தடைகள் நிறைந்த கூட்டத் தொடர்களுக்கு ஆரம்பத்தில் பேரவைக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் கீழான ஆரம்ப தலைவராக குறிப்பாக பொறியியற் பேரவையின் ஆரம்ப 18 மாத காலப் பகுதியில் தழும்பல் நிலையிலான இன்னல் மிக்க சுற்றுச் சூழலுக்கு மத்தியில் பேரவையை செயற்படுத்துகையில் சபையின் ஆரம்ப அனைத்து அங்கத்தவர்களினாலும் சுட்டிக் காட்டப்பட்ட நிபந்தனைகளற்ற அர்ப்பணிப்பு, ஆர்வம் மற்றும் பெறுமதி மிக்க உதவி தொடர்பில் இதன் போது குறிப்பிட வேண்டும். செலுத்துகை கொடுப்பனவுகள், சபை கூட்டத் தொடர் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், பேரவை அதன் இடப் பரப்பினுள் தனது செயற் பணிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. இக் காலப் பகுதியில் பொறியியற் பேரவையின் கூட்டத் தொடர்களை பௌதீக ரீதியாக நடாத்தும் பொருட்டு தனது இடப் பரப்பை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குதல் தொடர்பில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிர்வாகத்திற்கும், இலங்கைப் பொறியியல் நிறுவனத்துக்கும் நன்றி தெரிவிப்பதற்கு இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன்.

பூச்சிய கணக்குடன் கூடியதாக பேரவைக்கு நிரந்தர இருப்பிடமொன்றைக் கண்டறிதல் முன்னுரிமை மிக்க சவாலாகக் காணப்பட்டது. அரசுக்கும், பகுதி அரச நிறுவனங்களுக்கும் உரித்தாக காணப்படக் கூடிய ஒரு சில இடங்கள் அவதானிக்கப்பட்ட பிற்பாடு, நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் மேல் மாடியில் காணப்படக் கூடிய இட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பேரவை விருப்பம் தெரிவித்தது. இதன் போது நீர்ப்பாசன திணைக்களம் நாட்டினுள் நிலை நாட்டிய முதலாவது பொறியியல் நிறுவனங்களில் ஒரு நிறுவனமாகக் காணப்படுதல் மற்றும் பல பொறியியல் தொழில்

முனைவர்கள் பேரவை நிலை நாட்டப்பட்டுள்ள கட்டிடத்தை வரலாற்று சிறப்பு மிக்க கட்டிடமாகக் கருதுதல், கட்டிடத்தின் இடவமைப்பு மற்றும் கட்டிட அலங்கரிப்பு மற்றும் நீர்ப்பாசனப் பொறியியல் செயற்பாடுகளின் போது சுவீகரித்துள்ள தன்னியக்க வரலாற்று வெற்றிகள் தொடர்பில் உலகலாவிய ரீதியாக இலங்கை ஏற்றுக் கொள்ளப்பட்டமை போன்ற விடயங்கள் ஏதுவாக அமைந்தன. இட வசதிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேவையான அனுமதிகளைப் பெற்றுக் கொள்கையில் மிக முக்கியமான செயற் பணிகளை முன்னெடுத்த நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் அக் கால் கட்டத்திலிருந்த செயலாளர் திரு என். ஏ. சிசிர குமார அவர்களினதும், குறித்த இடப் பரப்பை முன் மாதிரி அடிப்படையில் நவீனமயப்படுத்துவதற்கு அயராது உழைத்த அக் கால கட்டத்தில் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிய திரு எஸ். மோகனராஜா அவர்களினதும் பங்களிப்புக்கு மனப்பூர்வமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைப் பொறியியற் பேரவையின் உத்தியோகபூர்வ பொறுப்புகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் அல்லது பல்வேறு பகுதிகள் தொடர்பான ஒரு சில அடிப்படை செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்ட வண்ணம் 22 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்ட பிற்பாடு இலங்கையில் கீர்த்தி மிக்க பொறியியலாளர் மற்றும் இராஜதந்திரியான பொறியியலாளர் திரு டி. ஜே. விமல சுரேந்திர அவர்களினது 145 ஆவது நினைவேந்தல் தினமான 2019 செப்டம்பர் 17 ஆம் திகதி நீர்ப்பாசன திணைக்களத்தின் கட்டிட தலைமையகத்தில் இன்றளவில் காணப்படக் கூடிய இடத்தில் பொறியியற் பேரவை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைப் பொறியியற் பேரவையின் ஆரம்ப தலைவராக இச் செய்தியை மிக உணர்வு பூர்வமாகவும், மேன்மையுடனும் தயாரித்தும் முன் வைக்கின்றேன்.


இந் நாட்டின் பல்வேறு பொறியியல் தொழில் முனைவர்களினது கல்வி தொடர்பில் செலவை ஏற்கக் கூடிய இலங்கை குடி மக்களின் எதிர்ப்பார்ப்புகளின் பிரகாரம், இலங்கைப் பொறியியற் பேரவையினால் தன்னிச்சையான பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமிருப்பதாக மிகத் தயவாக குறித்துக் காட்டுகின்றேன்.

இந் நாட்டின் அனைத்து குடி மக்களினதும் நன்னெறி மிக்க வாழ்க்கை நிலையை மேலுயர்த்துதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட வண்ணம் தன்னியக்க பணிகளை வலுவாகவும், தொடர்ச்சியாகவும் முன்னெடுத்தல் இலங்கைப் பொறியியற் பேரவையின் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

இலங்கைப் பொறியியற் பேரவையின் எதிர்க்கால செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்கக் கூடிய
திறன் கிடைக்கவென வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் எஸ். பீ. எஸ். அபயகோன்
BSc Eng. M.A Sc. PhD. CEng. FIE (SL).Int. PEng (SL)
தலைவர்

## நிறுவனக் கட்டமைப்பு



## பேரவை

பேரவை 17 அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக காணப்படுவதுடன், அதில் 04 அங்கத்தவர்கள் உத்தியோகபூர்வமாக (பேராசிரியர் பதவிக்குக் குறைந்த பதவிகளை வகிக்காத பொறியியல் பீடங்களைச் சேர்ந்த மூன்று பீடாதிபதிகளையும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் துறை கல்வி ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம்) பதவியை வகிக்கக் கூடிய அங்கத்தவர்களாகக் காணப்படுவதுடன், ஏனைய 13 அங்கத்தவர்களையும் இலங்கைப் பொறியியற் பேரவை உரித்தான சமாந்தர நிலை அமைச்சு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர்.

"நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்கள்" ஒவ்வொரு இரண்டு வருடத்துக்கொரு முறையும் இலங்கைப் பொறியியற் பேரவையினால் பெயரிடப்படுகின்ற பல்வேறு பொறியியல் துறைகளை பிரதநிதித்துவப்படுத்துகின்ற ஏழு பட்டயம் பெற்ற அங்கத்தவர்களும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தினால் ஒவ்வொரு இரண்டு வருடத்துக்கொரு முறையும் பெயரிடப்படுகின்ற பல்வேறு பொறியியல் துறைகளை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற பட்டயம் பெற்ற பொறியியலாளரொருவரினாலும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் சார் கல்வி ஆணைக் குழுவினால் பெயரிடப்படுகின்ற பொறியியல் தொழில்நுட்பவியலாளர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்களிடையே பட்டயம் பெற்ற பொறியியலாளர்களின் ஒருவர் இலங்கைப் பொறியியற் பேரவையின் தலைவராக நியமிக்கப்படுகின்றார். 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதல் நியமிக்கப்பட்ட பேரவையின் அங்கத்தவர்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| இலக்கம் | பெயர் | தகைமைகள் | பதவி |
|---|---|---|---|
| 1. | பேராசிரியர் எஸ். பீ. எஸ். அபயகோன் | BSc Eng. M.A. Sc. PhD. CEng FIE (SL),Int. PEng (SL) | தலைவர் |
| 2. | பேராசிரியர் என். கே. விக்கிரமாரச்சி | BSc Eng. M.A. Sc. PhD. CEng FIE (SL),Int. PEng (SL) | அங்கத்தவர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்) |
| 3. | பேராசிரியர் ஜீ. பீ. பீ. ஹேரத் | BSc Eng. MEng. PhD | அங்கத்தவர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்) |
| 4. | பேராசிரியர் ஏ. அத்புத ராஜா | BSc Eng.(Hons) PhD. CEng MIE (SL) | அங்கத்தவர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்) |
| 5. | எஸ். யூ. கே. ரூபசிங்ஹ | PGDBM, PGCTM,AMIE(SL) | அங்கத்தவர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்) |
| 6. | பேராசிரியர் ஏ. கே. ஜயவர்தன | BSc Eng. (Hons).MSc. PhD. CEng Int. PE (SL)) FIE (SL), FIPM(SL), FNAS (SL) GSOLID. | அங்கத்தவர் |
| 7. | திரு திலக் டி சில்வா | BSc Eng. MSc, CEng(SL), CEng(UK), CITP)UK) FIE (SL), FIET (UK),FBCS (UK) SMIEEE (USA), MCS(SL), | அங்கத்தவர் |
| 8. | திரு ஜே. மீகொட | BSc Eng.(Hons) PGD,MBA, CEng FIE (SL),Int. PE (SL), SMIEEE (USA | அங்கத்தவர் |
| 9. | கே. பீ. ஐ. யூ. தர்மபால | BSc Eng. CEng FIE (SL), FICE (UK), FIE (Aust.), SMIEEE (USA) ,MSSE(SL), MACE ( SL), Int. PE (SL),PEng (Aust,) | அங்கத்தவர் |
| 10. | திரு எம். மனம்பேரி | BSc Eng.MS Eng, MBA, CEng, FIE (SL) | அங்கத்தவர் |
| 11. | திரு ஜே. ஏ. ஜி. ஆர். ஜயலத் | BSc Eng. MSc Eng, MEcon,PG(Dip) PG ( Dip) Cons. Mgt, FIE (SL), FCIHT (UK), LM (IRC),CMILT,MSSE (SL) | அங்கத்தவர் |
| 12. | பேராசிரியர் ரி. ஏ. ஜி. குணசேகர | M Eng. MSc Eng (Hons), PhD. CEng, IEng, MIE (SL),FIIE (SL) | அங்கத்தவர் |

| | | | |
|---|---|---|---|
| 13. | திரு டி. எஸ். செனரத் | MCGI (UK), IEng, MEG(SL), DTM (USA), FIIE (SL) | அங்கத்தவர் |
| 14. | திரு கே. ஆரியவங்ஷ | GCG(UK), MCGI(UK),IEng, MASCE (USA), MEG (SL) FIE (SL), MIAENG, FIIE (SL) | அங்கத்தவர் |
| 15. | திரு யு. பி. பி. கவிகேஷவ | BSc.(Hons), MCGI (UK),IEng, TEng,AIE (SL), MEG ( SL), MIAENG, FIIE (SL) | அங்கத்தவர் |
| 16. | திரு டி. அபேசிரிவர்தன | BSc Eng.CEng, MIE (SL) | அங்கத்தவர் |
| 17. | திரு சன்ன விஜேசேகர | IENG, FIIESL | அங்கத்தவர் |
| 18. | கலாநிதி திரு ஆனந்த ரனசிங்ஹ | BSc,Mtech,MEng, LLM( Colombo),LLM(Wales), PhD, CEng, FISructE (UK)FICE (UK)FIE (SL) FSSE, Attorney at Law | அங்கத்தவர் |

பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயகோன் அவர்கள் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து தலைவர் பதவியை வகித்திருப்பதுடன், 2019/2020 காலப் பகுதிக்கென இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் தலைவராகப் பணியை பொறுப்பேற்கும் பொருட்டு 2019 ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து செயற்படக் கூடிய வகையில் இலங்கைப் பொறியியற் பேரவையின் தலைவர் பதவியிலிருந்தும், பொறியியற் பேரவையிலிருந்து விடை பெற்றுச் சென்றுள்ளார்.

திரு திலக் டி சில்வா அவர்கள் 2019 ஒக்டோபர் இரண்டாம் திகதியிலிருந்து தலைவர் பதவியில் பதில் கடமையாற்றிய வண்ணமிருந்ததுடன், பிற்பாடு அதி மேதகு சனாதிபதியவர்களினால் தலைவராக அவரது பதவி 2019 ஒக்டோபர் இரண்டாம் திகதியிலிருந்து செயற்படக் கூடிய வகையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.
கலாநிதி ஆனந்த ரனசிங்க அவர்கள் 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதியிலிருந்து செயற்படக் கூடிய வகையில் பேரவையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

**<u>பணிக் குழுவிலுள்ள பணியாட்களின் எண்ணிக்கை</u>**

| | | |
|---|---|---|
| 1. | தலைமை நிறைவேற்று அதிகாரி | 01 |
| 2. | பதிவாளர் | 01 |
| 3. | தகவல் தொழில்நுட்ப அதிகாரி | 01 |
| 4. | கணக்காளர் | 01 |
| 5. | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 |
| 6. | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 7. | தனிப்பட்ட உதவியாளர் | 01 |
| 8. | அலுவலக உதவியாளர் | 01 |

## பேரவையின் அங்கத்தவர்கள் தொடர்பான சிறு விளக்கம்



**பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயகோன்**
தலைவர்
2018.04.10 ஆம் திகதியிலிருந்து 2019.10.01



**திரு திலக் டி சில்வா**
**தலைவர்**
2019.10.15 ஆம் திகதியிலிருந்து இது வரை
**பதில் கடமையாற்றும் தலைவர்**
2019.02.02 ஆம் திகதியிலிருந்து 2019.10.04
**பேரவையின் அங்கத்தவர்**
2018.04.10 ஆம் திகதியிலிருந்து 2019.10.14



**பேராசிரியர் என். கே. விக்கிரமாரச்சி**
பேரவையின் அங்கத்தவர்
(உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்)



**பேராசிரியர் ஜி. பி. பி. ஹேரத்**
பேரவையின் அங்கத்தவர்
(உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்)



**பேராசிரியர் திரு ஏ. அற்புத ராஜா**
பேரவையின் அங்கத்தவர்
(உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்)



**பேராசிரியர் எஸ். யு. கே. ரூபசிங்ஹ**
பேரவையின் அங்கத்தவர்
(உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ்)



**பேராசிரியர் ஏ. கே. எம். ஜயவர்தன**
பேரவையின் அங்கத்தவர்



**திரு ஜே. மீகொட**
பேரவையின் அங்கத்தவர்



**கே. பி. ஐ. யு. தர்மபால**
பேரவையின் அங்கத்தவர்



**திரு ஏ. மனம்பேரி**
பேரவையின் அங்கத்தவர்



**திரு ஜே. ஏ. ஜி. ஆர். ஜயலத்**
பேரவையின் அங்கத்தவர்



**திரு டி. அபேசிரிவர்தன**
பேரவையின் அங்கத்தவர்




**கலாநிதி திரு ஆனந்த ரனசிங்ஹ**
பேரவையின் அங்கத்தவர்



**கலாநிதி ரி. ஏ. ஜி. குணசேகர**
பேரவையின் அங்கத்தவர்



**திரு டி. எஸ். செனரத்**
பேரவையின் அங்கத்தவர்



**திரு கே. ஆரியவன்ஷ**
பேரவையின் அங்கத்தவர்



**லுதினன் கர்னல் திரு யு. பி. பி. கவிகேஷவ**
பேரவையின் அங்கத்தவர்



**திரு எச். எல். சி. ஜி. விஜேசேகர**
பேரவையின் அங்கத்தவர்

## விசேட சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள்



சனாதிபதியவர்களை வரவேற்றல்



இலங்கைப் பொறியியற் பேரவையின் அலுவகத்தின் உத்தியோகபூர்வ திறப்பு விழா



பொறியியற் பேரவையின் அங்கத்தவர்களை அறிமுகப்படுத்துதல்.





விருந்தினர் புத்தகத்தில்
கையொப்பமிடுதல்



மரபு ரீதியாக எண்ணெய்
விளக்கை ஏற்றுதல்



இலங்கைப் பொறியியற்
பேரவையின் உத்தியோகபூர்வ
இணைய தளத்தை ஆரம்பித்து
வைத்தல்



இலங்கைப் பொறியியற் சபையின் தலைவர் பேரவையில் உறையாற்றுதல்

அதி மேதகு சனாதிபதியவர்கள் பேரவையில் உறையாற்றுதல்






அதிமேதகு சனாதிபதியவர்களுக்கு நினைவுப் பரிசை வழங்குதல்



விருந்தாளிகள் மற்றும் பொறியியற் பேரவையின் அங்கத்தவர்கள்



விருந்தாளிகள் மற்றும் பொறியியற் பேரவையின் அங்கத்தவர்கள்



අධ්‍යක්ෂ වාරිමාර්ග විසින් ස්තූති කතාව කිරීම

இலங்கைப் பொறியியற் பேரவையின்
தலைவருக்கு பதிவுச் சான்றிதழை
கையளித்தல்



இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின்
தலைவருக்கு பதிவுச் சான்றிதழை
கையளித்தல்



இலங்கை கூட்டிணைக்கப்பட்ட
பொறியியல் நிறுவனத்தின் தலைவருக்கு
பதிவுச் சான்றிதழை கையளித்தல்



மூன்றாம் நிலை மற்றும் தொழிற் சார் கல்வி
ஆணைக் குழுவின் தலைவருக்கு பதிவுச்
சான்றிதழை கையளித்தல்



## குழுப் புகைப்படம்



## இலங்கைப் பொறியியற் பேரவையின் நிர்வாக செயற்பாடுகளின் கீழான விசேடமான சந்தர்ப்பங்கள்

### இலங்கைப் பொறியியற் பேரவையை நிலை நாட்டுதல்

- 2017 மார்ச் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் சட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டது.
- 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி பொறியியற் பேரவை நியமிக்கப்பட்டது.
- அமைச்சின் செயலாளர் திரு அனுர திசானாயக்க மற்றும் அவரது உத்தியோகத்தர்களுடன் 2018 ஆகஸ்ட் 10 ஆம் திகதி முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டது.
- 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி இலங்கைப் பொறியியற் பேரவையின் முதலாவது கூட்டத் தொடர் "சிபாதம் பியச" கட்டிடத்தில் நடாத்தப்பட்டது

### அமைச்சிடமிருந்து கிடைத்த பங்களிப்பு

- பொறியியற் பேரவையைப் பராமரிக்கும் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பொருட்டு அமைச்சின் மேலதிக செயலாளரான திரு ஆர். ஏ. ஆர். ஆர். ரூபசிங்க அவர்களும், முது நிலை உதவிச் செயலாளரான திருமதி லோஷினி யு. பீரிஸ் அவர்களும் தம்மால் இயன்றளவில் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர்.

### பேரவையை நிலை நாட்டுதல் தொடர்பில் பொது மக்களை அறிவூட்டுதல்

- 2018 டிசம்பர் 16 மற்றும் 19 ஆம் திகதிகளில் பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதன் வாயிலாக பொறியியற் பேரவை நிலை நாட்டப்படுதல் தொடர்பில் பொது மக்கள் அறிவூட்டப்பட்டனர்.

### திறப்பு விழா

- இலங்கைப் பொறியியற் பேரவையின் அலுவலகம் அதிமேதகு சனாதிபதியவர்களினால் 2019 செப்டம்பர் 17 ஆம் திகதி நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் விழாக் கோலத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

## இலங்கை "பொறியியலாளர்களினது தினம்" ஐ பிரகடனப்படுத்துதல்

- ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி "பொறியியலாளர்களினது தினம்" ஆக அதிமேதகு சனாதிபதியவர்களினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

## இலட்சினையை தேர்ந்தெடுத்தல்

- இலங்கைப் பொறியியற் பேரவை தொடர்பில் திரு எச். பி. தயாரத்ன அவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட இலட்சினை பொறியியற் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## பேரவையின் கூட்டங்கள்

- ஆரம்பத்தில் பேரவையின் கூட்டங்களை நடாத்துவதற்கு குறித்த இடமொன்று காணப்படாதிருந்ததுடன், அச் சந்தர்ப்பத்தில் கூட்டங்களை நடாத்தும் பொருட்டு அமைச்சினால் தனக்குரிய வலாகத்தினுள் இட வசதிகள் வழங்கப்பட்டன.

## அலுவலகத்தை நிலை நாட்டுதல்

- நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் மேல் மாடியில் இட வசதிகள் வழங்கப்பட்ட வண்ணம் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் மற்றும் அவரது பணிக் குழு எல்லா வகையிலும் பங்களிப்பை வழங்கியது
- திரு சன்ன விஜேசேகர அவர்கள் மற்றும் அவரது குழுவினால் அலுவலகத்தின் உள்ளக கட்டமைப்பு மற்றும் தளபாடங்கள் வடிவமைக்கப்பட்டன.

## ஊழியர் குழுவிற்கு அனுமதியை பெற்றுக் கொள்வதுடன் தொடர்புடைய ஒருங்கிணைப்பு செயற்பாடுகள்

முகாமைத்துவ சேவை திணைக்களத்திடமிருந்து ஊழியர் பணிக் குழுவுக்கு அனுமதியை பெற்றுக் கொள்ளும் பொருட்டு பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயகோன் அவர்கள் மற்றும் அமைச்சின் செயலாளரினால் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

## உத்தியோகபூர்வ இணைய தளத்தை திறந்து வைத்தல்

2019 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி உத்தியோகபூர்வ இணைய தளமான www.ecsl.lk திறந்து வைக்கப்பட்டது.

## பணிக் குழு

இலங்கைப் பொறியியற் பேரவையின் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு 2019 ஒக்டோபர் 17 ஆம் திகதி பணிக் குழு தொடர்பில் ஒருங்கிணைப்பாளரொருவர் நியமிக்கப்பட்டார்.

## நிதி நிலைமை

திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட நிதியங்கள் கிடைக்கும் வரை இலங்கைப் பொறியியற் பேரவை (IESL) மற்றும் இலங்கை கூட்டிணைப்பு பொறியியல் நிறுவனம் (IESL) ஆகியன இலங்கைப் பொறியியற் பேரவையுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பொருட்டு ரூபா ஒரு மில்லியன் எனும் அடிப்படையில் கடனை வழங்கியுள்ளன.

## பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் இன்றளவில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள செயற்பாடுகள்

பொறியியல் தொழில் முனைவர்களை பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளை சேர்ந்த பொறியியல் தொழில் முனைவர்களை பதிவு செய்யும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- பட்டயம் பெற்ற பொறியியலாளர்கள்
- இணைப் பொறியியலாளர்கள்
- சேர் நிலைப் பொறியியலாளர்கள்
- கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள்
- பொறியியல் டிப்ளோமாதாரிகள்

(2019 ஜனவரி 27 மற்றும் 30 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரங்கள்)

தொழில் வகுதியைக் கருத்திலெடுக்காது அனைவரிடமிருந்தும் ஒரே சமமான வருடாந்த பதிவுக் கட்டணத்தை அறவிடுவதற்குப் பிரேரிக்கப்பட்டது.

2019 ஆண்டு காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட தொழில் முனைவர்கள் தொடர்பான விபரங்கள்

- பட்டயம் பெற்ற பொறியியலாளர்கள் - 5,409
- இணைப் பொறியியலாளர்கள் - 10,491
- சேர் நிலைப் பொறியியலாளர்கள் - 129
- கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் - 410
- பொறியியல் டிப்ளோமாதாரிகள் - 594

## பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

02 பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

- சட்ட ஆலோசகர் திருமதி ருவினி ஹபுஆரச்சி அவர்களினால் இலங்கைப் பொறியியற் பேரவை சட்டத்தின் சட்ட ரீதியான பின்னணி தொடர்பில் பேரவையின் அங்கத்தவர்களை அறிவூட்டும் பொருட்டு முதலாவது கூட்டத் தொடர் நடாத்தப்பட்டது.
- இலங்கைப் பொறியியற் பேரவையின் சட்டத்தை செயற்படுத்துகையில் ஏற்படக் கூடிய சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துறையாடும் பொருட்டு அரச மற்றும் பகுதி அரச பொறியியல் நிறுவனத் தலைவர்களினது தலைமையில் இரண்டாவது பணிப் பட்டறை நடாத்தப்பட்டது.

## இன்றளவில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள செயற்பாடுகள்

- சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளை தயாரித்தல்
- தொழிற் சார் நடத்தை தொகுதியொன்றை நிலை நாட்டுதல்
- பங்குதாரர்களுடன் கூட்டங்களை நடாத்துதல்
- கோரிக்கைகள் தொடர்பில் பதிலளித்தல்

## இலங்கை பொறியியற் பேரவையின் எதிர்க்காலம்

இலங்கைப் பொறியியற் பேரவை, இன்றளவில் அதன் செயற்பாடுகளை கட்டியெழுப்பிய வண்ணம் அதன் பணிகளை முன்னெடுத்த வண்ணமிருப்பினும், பொறியியற் சார் செயற்பாடுகள் தொடர்பில் அதி கூடிய ஒருங்கிணைப்பு செயற்பாட்டின் ஊடாக நிறுவனமாக பல தசாப்த காலமாக அல்லது நூற்றாண்டுகளாக இலங்கையின் எதிர்க்கால தலைமைத்துவம் தொடர்பில் சட்ட ரீதியான மற்றும் சட்ட ரீதியாக மிகவுயர்ந்த நம்பிக்கையுடன் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இதனால் எதிர்க்கால செயற்பாடுகளை அதன் விளக்கத்துடன் மிகத் தெளிவாகவும், ஒவ்வொன்றாகவும் காணப்பட வேண்டுமென தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒரு சீராக நிலை நாட்டப்பட்ட அரச அனுசரணையுடன் செயற்படக் கூடிய நிறுவனமொன்றாக இலங்கைப் பொறியியற் பேரவையினால் குறுகிய கால மற்றும் நீண்ட கால நிகழ்ச்சித் திட்டமாக ஒரு சில எதிர்க்கால செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் வருட காலப் பகுதியில் ஆட் சேர்ப்பு மற்றும் அத்தியாவசியமான பிரதானமான பணிக் குழு பயிற்சிகள் மற்றும் அத்தியாவசியமான உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல் போன்ற இலங்கைப் பொறியியற் பேரவையின் மேம்பாடு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள அதிகளவான செயற்பாடுகளை பூர்த்தி செய்யும் பொருட்டு திட்டங்களை செயற்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், பொறியியல் தொழில் முனைவர்களை பதிவு செய்யும் பிரதானமான செயற்பாடுகள் பேரவைக்கும், பதிவு செய்யப்பட்ட தொழில் முனைவர்களுக்கும் இலகுவான செயற்பாடாக நியமிப்பதற்குத் தேவையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

இலங்கைப் பொறியியற் பேரவை மற்றும் பொறியியற் தொழில் முனைவர்களை பணிகளில் ஈடுபடுத்தும் நிறுவனங்களான அரச பிரிவு மற்றும் தனியார் பிரிவு மற்றும் பொது மக்களுடன் கூட்டாக பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டதன் வாயிலாக அச்சிடப்பட்ட தகவல்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பயன்பாட்டின் ஊடாக அல்லது கடித பரிமாற்றத்தின் மூலம் வலுவான கலந்துறையாடலை எதிர் வரும் காலப் பகுதியில் ஏற்படுத்துதல் மேலும் முக்கியமான விடயமாக காணப்படுகின்றது.

பொறியியல் தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் வெளி நாட்டு தொழில் முனைவர்களை பதிவு செய்யும் செயற்பாடுகளின் போதும் ஏற்படக் கூடிய பிரதானமான பிரச்சினைகளை மிகத் துரிதமாக தீர்க்கும் பொருட்டு தீர்மானமெடுத்தல்.

இலங்கையில் அனைத்து பொறியியல் தொழில் முனைவர்கள் தொடர்பிலும் காணப்படக் கூடிய அனைத்து செயற்பாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அதி உயர் நிலை நிறுவனமாக இறுதியாக நிரந்தர நிறுவனமாக இலங்கைப் பொறியியற் பேரவைக்கு செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பொறியியற் பேரவையை பராமரிக்கும் பொருட்டு அதன் அபிமானத்தை பேணக் கூடிய வகையில் பொருத்தமான சுற்றுச் சூழலொன்றில் வலாகத்தை கட்டியெழுப்பும் பொருட்டு எதிர்வரும் செயற்பாடுகளின் பிரதானமான பிரிவாக இதனை மாற்றிக் கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## நிதிக் கூற்று

### நிதி செயலாற்றுகைக் கூற்று

| இறுதி ஆண்டு காலப் பகுதி தொடர்பாக | குறிப்பு இலக்கம் | 2019 ரூபா. '000 | | 2018 ரூபா. '000 |
|---|---|---|---|---|
| செயற்படுத்துகை பணிகளின் வாயிலாக ஈட்டப்பட்ட வருமானம் | 01 | 17,033 | | - |
| திறைசேரி கையளிப்புகள் - மீண்டு வரும் | | 3,548 | | - |
| **மொத்த வருமானம்** | | **20,581** | | - |
| | | | | |
| நிர்வாக செலவு | 21 | (2,805) | | - |
| ஒப்பந்தங்களுக்கு வந்துள்ள சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் | 22 | (454) | | - |
| ஏனையை செயற்படுத்துகை செலவுகள் | 23 | (2,625) | | - |
| **மொத்த செலவு** | | **(5,884)** | | |
| | | | | |
| **செயற்படுத்துகைகளின் வாயிலான மேலதிகம் / (குறைவு)** | | 14,657 | | - |
| | | | | |
| வரி | | (1,086) | | - |
| **காலப் பகுதி தொடர்பான மேலதிகம் / (குறைவு)** | | **13,611** | | - |

### நிதி நிலைமை தொடர்பான கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2019 ரூபா. '000 | | 2018 ரூபா. '000 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| நடைமுறை சொத்துக்கள் | | | | |
| நிதி மற்றும் நிதிக்கு நிகரான | 03 | 2,038 | | - |
| நிதி மற்றும் நிதிக்கு நிகரான - குறுகிய காலப் பகுதிக்கு | 04 | 14,000 | | |
| முதலீடு | 05 | 3,731 | | - |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள் | 06 | 30 | | - |
| | | 19,799 | | - |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | | |
| சொத்துக்கள், இயந்திரோபகரணங்கள், உபகரணங்கள் | 07 | 3,036 | | |
| | | | | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **22,835** | | |
| | | | | - |
| **பொறுப்புகள்** | | | | - |
| நடைமுறை பொறுப்புகள் | | | | |
| ஏனைய நிதியங்கள் மற்றும் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் | 08 | 6,188 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | | | |
| தாமத வருமானம் (அரசின் கையளிப்பாக) | 09 | 3,036 | | |
| | | | | |
| **மொத்த பொறுப்புகள்** | | **9,224** | | |
| | | | | |
| **நிகர பொறுப்புகள்** | | **13,611** | | |
| | | | | |
| **நிகர சொத்துக்கள் / உரிமங்கள் மூலதனம் மற்றும் உள்ளடக்கம்** | | | | |
| பங்களிப்பு மூலதனம் | 10 | | | |
| ஒட்டு மொத்த இலாபம் / (குறைப்பாடு) | 10 | 13,611 | | |
| மொத்த நிகரச் சொத்துக்கள் / உரிமங்கள் | | **13,611** | | - |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் 05 இலிருந்து 11 வரையான பக்கங்களின் குறிப்புகள் இந் நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கத்தின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது.

பொறியியற் பேரவைக்கு உரித்தான, இன்றளவிலுள்ள அறிக்கைகளின் பிரகாரம் மேற்குறித்த நிதிக் கூற்றுக்கள் உண்மையான மற்றும் சரியான விடயங்களை வெளிக் காட்டுவதாக சான்றுபடுத்துகின்றேன்.

பீ. ஏ. பீ. சில்வா
கணக்காளர் (பதில் கடமையாற்றும்)
நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் முன் வைப்பதுடன் தொடர்புடையதாக பேரவையின் அங்கத்தவர்கள் பொறுப்பு கூற வேண்டியுள்ளனர்.
பொறியியற் பேரவை சார்பாக அனுமதிக்கப்பட்டு கைச்சாடிடப்பட்டது.

எந்திரி திலக் டி சில்வா
தலைவர்
இலங்கைப் பொறியியற் பேரவை
2021 ஆம் ஆண்டு பெப்ரவரி 05 ஆம் திகதி

எந்திரி டி. எஸ். சௌரத்
பேரவையின் அங்கத்தவர்

<u>**நிதியோட்டக் கூற்று**</u>

| | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|
| **செயற்படுத்துகை நடவடிக்கைகளின் ஊடாக பெறப்பட்ட நிதியோட்டம்** | **ரூபா. '000** | | **ரூபா. '000** | |
| திறைசேரியின் கையளிப்புகளுக்கு முன்னைய ஆண்டின் மேலதிகம் (குறைப்பாடு) (மீண்டு வரும்) | | 11,149 | | |
| ஒன்று சேர்த்த : கிடைக்கப் பெற்ற திறைசேரி கையளிப்பு (மீண்டு வரும்) | | 3,548 | | |
| வருடத்தின் வரிகளுக்கு முன்னைய மேலதிகம் / (குறைப்பாடு) | | **14,697** | | |
| **பணமற்ற கொடுக்கல் வாங்கல்கள்** | | | | |
| செலுத்த வேண்டிய பணத் தொகை அதிகரித்தல் | 5,102 | | | |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் அதிகரித்தல் | (3,761) | 1,341 | | |
| செயற்படுத்துகை நடவடிக்கைகளின் வாயிலான | | 16,038 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| நிகர நிதியோட்டம் | | | | |
| **முதலீடுகளின் கீழான நிதியோட்டம்** | | | | |
| சொத்துக்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (3,140) | | | |
| **முதலீட்டு செயற்பாடுகளின் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற நிகர நிதியோட்டம்** | | **(3,140)** | | |
| **நிதிச் செயற்பாடுகளின் வாயிலாக கிடைக்கப் பெற்ற நிதியோட்டம்** | | | | |
| அரச கையளிப்புகள் (சொத்துக்கள் இயந்திரோபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மூலதனம்) | 3,140 | | | |
| **நிதிச் செயற்பாடுகளின் வாயிலாக கிடைக்கப் பெற்ற நிகர நிதியோட்டம்** | | **3,140** | | |
| **பணம் மற்றும் பணத்துக்குச் சமமான நிகர அதிகரிப்பு / (குறைவு)க்** | | **16,038** | | |
| காலப் பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்தின் சராசரி | | - | | |
| **காலப் பகுதியின் இறுதியில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்தின் சராசரி** | | **16,038** | | |

நிதியோட்டக் குறிப்புகளுடன் தொடர்புடைய குறிப்புகள்

பணம் மற்றும் பணத்துக்கு சமமான வங்கி மீதிகள் உள்ளடங்குகின்றன. பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை உள்ளடங்கிய நிதியோட்டக் கூற்றில் கீழே குறிப்பிடப்படுள்ள நிதி நிலைமைகள் உள்ளடங்குகின்றன.

| | 2019 | 2018 | |
|---|---|---|---|
| | **ரூபா. '000** | **ரூபா. '000** | |
| வங்கியின் நடைமுறைக் கணக்கின் மீதி (குறிப்பு இலக்கம் 03) | 2038 | | |
| முதலீடு - நிலையான வைப்புகள் (குறுகிய கால) குறிப்பு இலக்கம் 04 | 14,000 | | |
| | **16,038** | | |

நிதியோட்டக் குறிப்புகளுடன் தொடர்புடைய குறிப்புகள்

செயற்படுத்துகை நடவடிக்கைகளின் மூலமான வருமானம்

| | 2019 | 2018 |
|---|---|---|
| குறிப்பு இலக்கம் : 01 | **ரூபா. '000** | **ரூபா. '000** |
| பதிவு செய்தல் | | |
| பட்டயம் பெற்ற பொறியியலாளர்கள் | 5,409 | |
| இணைப் பொறியியலாளர்கள் | 10,491 | |
| சேர் நிலைப் பொறியியலாளர்கள் | 129 | |
| கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் | 410 | |
| பொறியியல் டிப்ளோமாதாரிகள் | 594 | |
| முழு மொத்தம் | **17,033** | |
| **செலவு** | | |
| **குறிப்பு இலக்கம் 2 : 1** | | |

| | | |
|---|---|---|
| **நிர்வாக செலவு** | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 918 | |
| பேரவையின் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | 1,887 | |
| **மொத்தம்** | **2,805** | - |
| **குறிப்பு 2 : 2** | | |
| **ஒப்பந்தத்துக்கு வந்த சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவுகள்** | | |
| தபால் மற்றும் தொலைபேசிக் கட்டணம் | 18 | |
| தகவல் தொழில்நுட்ப செலவுகள் | 165 | |
| உபசரிப்பு | 68 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 75 | |
| அச்சிடல் | 34 | |
| மதியுறைக் கட்டணம் | 49 | |
| நானாவித செலவுகள் | 33 | |
| அலுவலக் உபகரணங்களின் பராமரிப்பு | 12 | |
| **மொத்தம்** | **454** | |
| **குறிப்பு 2 : 3** | | |
| **ஏனைய செயற்படுத்துகை செலவுகள்** | | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 3 | |
| வார சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் | 600 | |
| வங்கிக் கட்டணங்கள் | 3 | |
| செலுத்தப்பட்ட வட்டி | 3 | |
| ஏனைய செயற்படுத்துகை செலவுகள் | 2,616 | |
| **மொத்தம்** | **2,625** | |
| | | |
| **முழு மொத்தம்** | **5,884** | |

| | 2019 | 2018 | |
|---|---|---|---|
| **குறிப்பு இலக்கம் : 03** | ரூபா. '000 | ரூபா. '000 | |
| **பணம் மற்றும் பணத்துக்கு நிகரான** | | | |
| (1) இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) (நடைமுறை கணக்கு இலக்கம் 83585687) | 1,570 | | |
| (2) இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) (நடைமுறை கணக்கு இலக்கம் 83591633) | 453 | | |
| கட்டு நிதி | 15 | | |
| **முழு மொத்தம்** | **2,038** | | |
| **குறிப்பு இலக்கம் : 04** | | | |
| **பணம் மற்றும் நிகரான - முதலீடுகள் (குறுகிய கால)** | | | |
| (1) நிலையான வைப்பு - இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) 85326167 | 10, 000 | | |
| (2) நிலையான வைப்பு - இலங்கை வங்கி (சுதந்திர சதுக்கம்) 85326186 | 4,000 | | |
| **முழு மொத்தம்** | **14,000** | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| **குறிப்பு இலக்கம் 05** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய பணம் | | | |
| கிடைக்க வேண்டிய அங்கத்துவ கட்டணம் | 3,731 | | |
| **முழு மொத்தம்** | **3,731** | | |
| | | | |
| **குறிப்பு இலக்கம் 06** | | | |
| முன்னைய கொடுப்பனவுகள் | | | |
| தகவல் தொழில் நுட்ப செலவுகள் | 30 | | |
| **முழு மொத்தம்** | **30** | | |
| | | | |
| **குறிப்பு இலக்கம் 08** | | | |
| **ஏனைய நிதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள்** | | | |
| (1) கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பான நிதியங்கள் | 75 | | |
| (2) செலுத்த வேண்டிய வரி | 17 | | |
| (3) ஏனைய கொடுப்பனவுகள் | 7 | | |
| (4) வருமான வரிக் கொடுப்பனவுகள் | 1, 086 | | |
| (5) பெறுமதி ஒன்று சேர் வரிக் கொடுப்பனவு | 1,549 | | |
| (6) அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கான முற் பணம் | 3,454 | | |
| **முழு மொத்தம்** | **6,188** | | |

## சொத்துக்கள், இயந்திரொபகரணங்கள் மற்றும் உபகரணங்கள்

### குறிப்பு இலக்கம் : 07

| **செலவு** | 2019.01.01 ஆம் திகதிய மீதி | கூட்டுத் தொகை | வெளிப்படுத் துகை / விடுவிப்பு | 2019.12.31 ஆம் திகதிக்கு மீதி |
|---|---|---|---|---|
| | **ரூபா ‘000** | **ரூபா ‘000** | **ரூபா ‘000** | **ரூபா ‘000** |
| | | | | |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 3,041 | | 3, 041 |
| கணினிகள் மற்றும் தொகுதிகள் | | 99 | | 99 |
| **முழு மொத்தம்** | | **3140** | | **3140** |
| **தேய்வு** | 2019.01.01 ஆம் திகதிய மீதி | கூட்டுத் தொகை | வெளிப்படுத் துகை / விடுவிப்பு | 2019.12.31 ஆம் திகதிக்கு மீதி |
| | **ரூபா. ‘000** | **ரூபா. ‘000** | **ரூபா. ‘000** | **ரூபா. ‘000** |
| | | | | |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 101 | | 101 |
| கணினிகள் மற்றும் தொகுதிகள் | | 3 | | 3 |
| **முழு மொத்தம்** | | 104 | | 104 |
| **புத்தகங்களின் நிகர பெறுமதி** | | | | **3,036** |

நிதி செயலாற்றுகை தொடர்பான தேய்வுக் கட்டண கணக்கீட்டுச் செயற்பாடு கீழேயுள்ளவாறு முன்னெடுக்கப்பட்டது

| தேய்வு | ஆண்டுக்கான கட்டணம் | ஆண்டு காலப் பகுதி தொடர்பான தாமத வருமானம் | வெளிக் காட்டிக் கொண்டுள்ள பணத் தொகை |
|---|---|---|---|
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 101 | 101 | |
| கணினிகள் மற்றும் தொகுதிகள் | 3 | 3 | |
| முழு மொத்தம் | **104** | **104** | |

## குறிப்பு இலக்கம் : 09

| தாமதமாகக் கிடைத்த வருமானம் | 2019.01.01 ஆம் திகதிக்கு மீதி | வருட காலப் பகுதி தொடர்பான கூட்டுத் தொகை | ஆண்டு காலப் பகுதிக்கான கட்டணம் | | 2019.12.31 ஆம் திகதிக்கு மீதி |
|---|---|---|---|---|---|
| | | | தேய்வு ரூபா. | மீள் கண்காணிப்பு ஒப்பிடுகை / வெளியகற்றல் | |
| | ரூபா. ‘000 | ரூபா. ‘000 | ரூபா. ‘000 | ரூபா. ‘000 | ரூபா. ‘000 |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 3,041 | (101) | | 2,940 |
| கணினிகள் மற்றும் தொகுதிகள் | | 99 | (3) | | 96 |
| **முழு மொத்தம்** | | **3,140** | **(104)** | | **3,036** |

நிகர சொத்துக்கள் / உரிமைகளின் மாறுபாடுகள் தொடர்பான கூற்றுக்கள் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு

| குறிப்பு இலக்கம் : 10 | பங்களிப்பு மூலதனம் | முழு மொத்த இலாபம் / குறைப்பாடுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் கொண்டு சென்ற** | | | |
| காலப் பகுதி தொடர்பான மேலதிகம் / குறைப்பாடு | | | |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | | | |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் கொண்டு சென்ற** | | | |
| காலப் பகுதி தொடர்பான மேலதிகம் | | 13,611 | 13,611 |
| **2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | | **13,611** | **13,611** |

# தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அறிக்கை

எனது இலக்கம் : IEN/A/ECSL/FA/2019 2021 ஜூன் 30 ஆம் திகதி

தலைவர்
இலங்கைப் பொறியியற் பேரவை

இலங்கைப் பொறியியற் பேரவையின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பில் 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

இலங்கைப் பொறியியற் பேரவையின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பில் 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இலங்கைப் பொறியியற் பேரவையின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பு சட்டத்தின் 154 (6) ஆம் சட்டத்தின் உறுப்புரைக்கு அமைய எனது அறிக்கையை எதிர்வரும் காலப் பகுதியில் பாராளுமன்றத்துக்கு முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பேரவையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ) 2020 ஆம் ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம் மீளாய்வாண்டின் போது கிடைத்திருக்காத போதும் ரூபா 3,730,320 தொகை கிடைக்க வேண்டிய மற்றும் முற் பணப் பெறுவனவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

ஆ) அரச மானியமாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 3,140,000 தொகையான நிலையான சொத்துக்களின் காலக் கழிவு வருமான மூலத்தின் பிரகாரம் இனங் காணப்பட்டதாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய காலக் கழிவு வருமானமாக இனங் காணப்படாமல் காலக் கழிவுப் பெறுமதி நிலையான சொத்துக்களிலிருந்தும், மூலதன மானியங்களிலிருந்தும் குறைக்கப்பட்டு கணக்கீட்டுக் கொள்கைக்கு முரணாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இ) மீளாய்வாண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டிற்கான பெறுமதி ஒன்று சேர் வரி அறிக்கையின் பிரகாரம் முறையே செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய வரித் தொகை ரூபா 383,682 மற்றும் ரூபா 668,366 ஆக இருந்த போதிலும் உரிய செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய வரி சீராக்கப்படாமல் செலுத்த வேண்டிய வரி மீதி ரூபா 1,548,811 ஆக நிதிக் கூற்றுக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும், நிர்வாகத் தரப்பினரதும் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன் முறையை மேற்பார்வை செய்தல் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக் கூடுமென்பதுடன், அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித் தனியாகவோ அல்லது கூட்டு மொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக் கூடுமென நியாயமாக எதிர்ப்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் தீர்ப்புகளை நன் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன் ;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங் கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர் கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத் தனம், வேண்டுமென்று விட்டு விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டு பிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்கான கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் காடுப்பாடுகளின் செயற் திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்க்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட மிக முக்கியமான கணக்காய்வு கண்டறிவுகள், பிரதான உள்ளக நிர்வாக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கின்ற தரப்பினர் அறிவூட்டப்பட்டனர்.

## 2. பிற சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பில் குறிப்பாக ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

- 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கையில் முனைப்பழிப்புள்ள

அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படக் கூடிய தாக்கங்களைத் தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களும், விளக்கப்படுத்துகைகளும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், சபையினால் நிதிக் கூற்றுக்கள் சீராக பேணப்பட்டிருப்பதாக எனது பரீட்சிப்பின் மூலம் அவதானிக்கப்பட்டது.

பின்பற்றப்பட்ட செயன் முறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களின் பிரகாரமும், போதியளவான விடயங்கள் தொடர்பில் வரையறுக்கப்பட்டமையாலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன் வைப்பதற்குப் போதியளவான விடயங்கள் எனது கண்காணிப்பிற்கு உள்ளாகவில்லை.

- 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் சபையின் நிர்வாக சபையை சேர்ந்த ஏதாவதொரு அங்கத்தவருக்கு நிறுவனத்துடன் தொடர்புள்ள ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் பொதுவே வர்த்தக நிலைக்குப் புறம்பாக தொடர்பு காணப்படுவதாக.

- 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர்த்து தொடர்புடைய ஏதாவதொரு எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது சபையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாகாத வகையில் செயற்பட்டிருப்பதாக.

- 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பணிகளுக்குப் பொருந்தாத வகையில் செயற்பட்டிருப்பதாக.

- 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபைக்கு சொந்தமான வளங்கள் சிக்கனமாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் மற்றும் பயன்தரு காலப் பகுதியிலும் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பெருகை செயன் முறை பின்பற்றப்பட்டு பயன்படுத்தப்படவில்லையென.

## 2.1 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பொறியியற் பேரவைக்காக 08 பதவிகளுக்கு 09 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட் சேர்ப்பு மேற்கொள்ளப்படாமல் அங்கீகரிக்கப்படாத 03 பதவிகள் ஏற்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 621,387 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. பதவிகளுக்கான ஆட் சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் நிரந்தர பதவியணிக்கு எந்தவொரு ஊழியரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

## <u>கணக்காய்வு அறிக்கைக்கு பதிலளித்தல்</u>

<u>பணிக் குழுவை இணைத்துக் கொள்ளுதல்</u>

சட்டம் நிலை நாட்டப்பட்ட பிற்பாடு, பேரவையின் முதலாவது கூட்டம் 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி நடாத்தப்பட்டது. பொறியியற் பேரவைக்கு (ECSL) உரித்தாக நிரந்தர இட வசதிகள் காணப்படாமையால், 2019 செப்டம்பர் மாதம் வரை அனைத்து கூட்டத் தொடர்களும் இலங்கைப் பொறியியல் நிறுவனத்தில் (IESL) நடாத்தப்பட்டது. அவ்வாறே, இலங்கைப் பொறியியற் பேரவையின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு போதியளவில் பணிக் குழு காணப்படாமையால் இது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு (MSD) கோரிக்கை விடுக்கப்பட்டது. நிதிச் செயற்பாடுகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கும் பொருட்டு ஆரம்பத்தில் நிதி

முகாமையாரொருவர் மாத்திரம் பகுதி அடிப்படையில் ஆட் சேர்ப்பு செய்யப்பட்டார். பிற்பாடு, நீர்ப்பாசன திணைக்களத்தினால் கொழும்பு - 7 ஜாவத்த வீதி இலக்கம் 230 ஐ உடைய இடத்தில் தனக்குச் சொந்தமான வலாகத்தில் இலங்கைப் பொறியியற் பேரவையின் அலுவலக செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு இட வசதிகள் ஒதுக்கப்பட்டதுடன், தேவையான உட் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு புதிய அலுவலகம் அதி மேதகு சனாதிபதியவர்களினால் 2019 செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2019 ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி பணிக் குழுவை இணைத்துக் கொள்வதற்கான ஆட் சேர்ப்புத் திட்டம் (SORP) அனுமதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2019 சனாதிபதி தேர்தல் காலப் பகுதியில் ஆட் சேர்ப்பை இடை நிறுத்துமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் திறைசேரியினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 நவம்பர் 20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அக் காலப் பகுதி மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

இலங்கைப் பொறியியற் பேரவையின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு இலங்கைப் பொறியியற் பேரவையின் சட்டத்தின் கீழ் பேரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தற்காலிகமாக சிறு பணிக் குழுவை இணைத்துக் கொள்வதற்கு பேரவையினால் தீர்மானிக்கப்பட்டது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக் குழு இணைத்துக் கொள்ளப்பட்டது.

1. ஒருங்கிணைப்பு அதிகாரி

இலங்கைப் பொறியியற் பேரவை சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவாளரொருவரினது பணிகளை முன்னெடுக்கும் பொருட்டு பொருத்தமான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள ஒருவர் (2019 ஒக்டோபர் மாதம்)

2. தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்

தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பணிகள் மற்றும் அலுவலகத்தின் ஏனைய உபசரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் (2019 நவம்பர் மாதம்)

3. நிதி முகாமையாளர் (பகுதி நேர அடிப்படையில்)

நிதி சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்தல் (2019 நவம்பர் மாதம்)